கட்டிக் கொடுக்கின்ற குடியிருப்புகளில் தங்கினால்தான் அங்கே இருக்கின்ற மக்களுக்கு வைத்திய வசதி கிடைக்கும். அதைத் தான் நான் சுட்டிக் காட்டினேனே தவிர இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் தெரியும். அரசினுடைய நிதிநிலைமையைக் குறித்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

மகளிருக்கான தொழிற்பயிற்சிக்கூட கட்டடம்.

குறுகிய கால வினா எண். *7970 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை தொகுதியில் மகளிருக்கான தொழிற் பயிற்சிக்கூட கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே,

(அ) கிண்டியில் இயங்கி வரும் மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக்கட்டடம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டட வேலை விரைவில் தொடங்கவிருக்கிறது

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் மகளிருக்கான தொழிற்பயிற்சிக்கூடம் ஒன்றே ஒன்று தான் உள்ளது. ஆனால் ஆண்டு தோறும் அதிகமான அளவு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆனால் மிகக் குறைந்த அளவு எண்ணிக்கைதான் இடம் அளிக்கப்படுகிறது. எனவே இந்த ஆண்டு கூடுதலான இடம் அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 250 பெணகள் என்று ஒவ்வொரு வருடமும் சேர்க்கபபடுகிறார்கள். அதிகப்படியான பெண்களை சேர்ப்பதற்கு நிரந்தர கட்டிட வசதியும், அதனுடைய பரிசோதனைக் கூடங்களும் இருந்தால் தான் அதிகப்படியான பெண்களைச் சேர்க்க முடியும. இருந்தும் உறுப்பினருடைய கருத்தை ஏற்று வரும் ஆண்டுக காலத்திலே அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபடும்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது பயிற்றுவிக்கப்படும்போது கட்டிங் அண்டு டெய்லரிங், ரேடியோ அண்டு டி.வி. மெக்கானிஸம், ஸ்டெனோகிராஃபி போன்ற தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன, மற்றும் கம்ப்யூட்டர் கோர்ஸ், கெமிக்கல் கோர்ஸ் போன்றவைகளை ஆரம்பிக்கின்ற திட்டம் நம்முடைய அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் முடிவு அப்படி அல்ல. இருந்தாலும் ஏற்கெனவே சொன்னது போல் இப்போது மத்திய அரசின் உதவியோடு தமிழகத்தில் 5 இடங்களில் புதிய ஐ.டி.ஐ. கட்டவிருக்கிறோம். வரும் ஆண்டு காலத்தில், சென்னையிலும் அதே போல் அமைவதற்கு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

சின்னவுடைப்பேரி குளத்தில் உடைப்பை அடைக்கும் பணி

வினா எண். 583—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிவகிரியிலுள்ள சின்னவுடைப்பேரி குளத்தில் உடைப்பு எற்பட்டுள்ளதை அடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சிவகிரி வட்டம், சிவகிரி கிராமத்தில் உள்ள சின்னவுடைப்பேரி குளத்தில் 26, அக்டோபர் 1987 அன்று ஏற்பட்ட உடைப்பை நிரந்தரமாக அடைக்கும் பணி செப்டம்பர் 1989-க்குள் முடிக்கப்பட்டுவிட்டன.